



# கட்டுமானத் தொழிலாளர் திட்டங்கள்!

## திராவிட மாடல் அரசு

87

**நீரை.மகேந்திரன்**

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி....**

அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு நலவாரியங்கள் அமைத்து, அதன்மூலம் அவர்களுக்குத் தொழில்பாதுகாப்பினை உறுதி செய்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். அவரது வழியில் நடைபெறும் திராவிட மாடல் அரசு, அமைப்புசாரா தொழிலாளர்கள் வாழ்வில் கொண்டுவந்துள்ள சமூகப் பாதுகாப்புத் திட்டங்களால் அவர்களது வாழ்க்கைத்தரம் முன்னேற்றம் கண்டு வருவதை மூன்றாண்டு தரவுகள் உறுதி செய்கின்றன.

அமைப்புசாரா தொழிலாளர் வாரியங்களில் அதிக உறுப்பினர்களைக் கொண்டுள்ள கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்துக்கு ‘திராவிடமாடல் நாயகர்’ நமது முதலமைச்சர் அறிவித்த முத்தான அறிவிப்பு, இன்று செயல்வேகம் கண்டு வருகின்றது.

### தொழிலாளர்களுக்கு வீடுகள்

தங்களது உழைப்பால் பல மாடிக் கட்டடங்களையும் சாத்தியமாக்கும் கட்டுமானத் தொழிலாளர்களுக்கு, நிரந்தரமாக சொந்த வீடுகள் இருக்காது என்பது யதார்த்தமான உண்மை. ‘அவர்களுக்கும் ‘கான்கிரீட் வீடு’ என்பது நீண்டநாள் கோரிக்கை. அந்தக் கோரிக்கைகளுக்குச் செவி சாய்த்த அரசு, 2021-ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டின்போதே நிரந்தத் தீர்வுக்கான அறிவிப்பினை வெளியிட்டது.

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதங்களுக்குப் பதிலளித்துப் பேசிய அந்தத் துறையின் அமைச்சர் சி.வி.கணேசன்,

“தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள தொழிலாளர்களுக்கு வீட்டுமனை சொந்தமாக இருந்தால், அவர்களாகவே வீடு கட்டிக் கொள்ளும் வகையில், நிதிஉதவி வழங்கும் திட்டத்தை அறிவித்தார்.

வீட்டுமனை இல்லாதவர்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால், ஏற்கனவே கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளில் ஒதுக்கீடு பெற நிதிஉதவி அளிக்கப்படும் என்றும் அந்தத் திட்டத்தில் அமைச்சர் அறிவித்தார். அதற்கான அரசாணை 2022-ஆம் ஆண்டு ஜனவரி 10-ஆம் தேதி வெளியிட்டது தமிழ்நாடு அரசு.

அதன்படி, தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தின் சார்பில், கட்டுமானத் தொழிலாளர்களுக்கு 4 லட்சம் ரூபாய் வரை வீட்டுவசதித் திட்ட நிதி உதவி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று, 15.11.2022 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அந்தத் திட்டத்தினைத் தொடங்கி வைத்து, 5 கட்டுமானத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டுவதற்கான ஆணைகளை வழங்கினார்.

### வீடு கட்டும் திட்டம்!

- திட்டம் அறிவிக்கப்பட்டு, 254 தகுதிவாய்ந்த பயனாளிகள் வீடு கட்டும் திட்டத்தில் பயன் பெற்றுள்ளனர். திட்டத்தின் கீழ் ரூ.4 லட்சம் நிதியுதவியினை அரசு வழங்கும்.
- கட்டுமானத் தொழிலாளர் நல வாரிய உறுப்பினருக்கு அல்லது அவரது குடும்ப உறுப்பினர்களுக்கு சொந்தமான கான்கிரீட் வீடு இருக்கக் கூடாது எனவும் திட்டம் வரையறுக்கப்பட்டு பயனாளிகள் தேர்வு செய்யப்படுகின்றனர்.
- வீட்டின் அளவு 300 சதுர அடியாகும். முதலில், ரூ.2.76 லட்சமும், அதன்பின்னர், ரூ. 1.25 லட்சமும் கூடுதல் செலவும் அனுமதிக்கப் படும்.
- கட்டுமானத் தொழிலாளர் வாரியத்தில் பதிவு செய்யப்பட்டு 3 ஆண்டுகள் முறையாகப் புதுப்பித்திருக்க வேண்டும்.
- வேறொரு வீட்டுவசதித் திட்டத்தில் பயன் பெற்றிருக்கக்கூடாது. இடத்துக்கான பட்டா, பயனாளி பெயரில் அல்லது அவர்களின் குடும்ப உறுப்பினர் பெயரில் இருக்க வேண்டும்.

அதையடுத்து, 2022 -23 நிதியாண்டில் 146 பயனாளிகளும், 2023- 24 நிதியாண்டுக்கு, 108 ஆண்டு பயனாளிகளும் ஆணை பெற்று பயனடைந்துள்ளனர். 31.08 2024 வரை 254 பயனாளிகள் வீடு கட்டுவதற்கான ஆணைகளைப் பெற்றுள்ளனர்.

கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்து 3 வருடங்கள் நிறைவு செய்துள்ள உறுப்பினர்கள், இதற்கு விண்ணப்பிக்கலாம். குறிப்பாக, கட்டுமானத் தொழிலாளர் நலவாரிய உறுப்பினர் பெயரில், குறைந்தபட்சம் 300 சதுர அடி நிலம் இருக்க வேண்டும். அந்த உறுப்பினர் பெயரில் பட்டா அல்லது அவர்களின் குடும்ப உறுப்பினர் பெயரில், அந்த நிலம் இருக்க வேண்டும்.

அமைப்புசாரா தொழிலாளர்கள் நல சங்கத்தைத் தொடர்பு கொண்டு, விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து, தேவைப்படும் ஆவணங்களுடன் நேரில் சென்று பதிவு செய்ய வேண்டும். வீடு கட்டுவதற்கான திட்டத்தை, பொறியாளரின் கையொப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

### கல்வி நலத்திட்ட உதவிகள்

2021-ஆம் ஆண்டு, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை சார்பில், கட்டுமானத் தொழிலாளர்களின் குடும்பத்தில் இருந்து உயர்கல்வியில் சேரும் குழந்தைகளுக்குக் கல்வி உதவிகள் புதிதாக அறிவிக்கப்பட்டன.

அதன்படி, தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியத்தில் பதிவுபெற்ற கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகள், இந்தியத் தொழில்நுட்பக் கழகம் (IIT), இந்திய மேலாண்மைக் கழகம் (IIM) மற்றும் தமிழ்நாட்டில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரிகளில்

## மாற்றங்களைத் தந்த அரசு

(எம்.பி.பி.எஸ்) சேர்க்கையின்போது, கல்விக் கட்டணம், தங்கும் விடுதி முழுக்கட்டணம் மற்றும் வாழ்க்கைச் செலவுக்காக ஒவ்வொரு ஆண்டும் 50 ஆயிரம் ரூபாயும் கல்வி உதவித் தொகையாக வழங்க ஆணைகள் வெளியிடப்பட்டன. இதன் மூலம் கட்டுமானத் தொழிலாளர் குழந்தைகளின் கல்விப் பாதுகாப்பும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

### விபத்து மரணங்கள் உதவி

கட்டுமானத் தொழிலாளர்கள் பணியிடத்தில், விபத்தினால் உயிர் இழக்க நேரிட்டால் அவர்களின் உடலை, சொந்த ஊருக்கு எடுத்துச் செல்வதற்காக ஏற்படும் செலவு அல்லது மொத்த செலவில், ஒரு லட்சம் ரூபாய் உதவித்தொகை அளிக்கவும், புதிய அறிவிப்பினை அரசு வெளியிட்டிருந்தது. இந்த உதவி வெளிமாநிலத் தொழிலாளர்களுக்கும் அளிக்கப்படும் எனவும் அறிவித்து, கட்டுமானத் தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பினை அனைவருக்குமாக, அரசு உறுதி செய்துள்ளது.

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு பெற்ற தொழிலாளர்கள் விபத்தில் மரணம் அடைந்தால், அவர்களின் குடும்பத்துக்கு வழங்கப்பட்டு வரும் விபத்து மரண உதவித் தொகை ரூ.1 லட்சத்தில் இருந்து இரண்டு லட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. 31.08.2024 வரை 217 குடும்பத்தினருக்கு ரூ.4 கோடியே 42 லட்சத்து 35 ஆயிரம் நலத்திட்ட உதவியாக அளிக்கப் பட்டுள்ளது.

**பல நலத்திட்ட உதவிகளும் காலத்திற்கேற்ப உயர்த்தப்பட்டு, கட்டுமானத் தொழிலாளர்களின் வாழ்க்கையில் மாற்றங்களைக் கொண்டு வருகிறது நம் மகத்தான அரசு.**

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற கட்டுமான தொழிலாளர் இயற்கை மரணம் அடைந்தால் குடும்பத்திற்கு தற்பொழுது வழங்கப்பட்டு வரும் இயற்கை மரண உதவித் தொகை 20 ஆயிரம் ரூபாயிலிருந்து 50 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. 30.04.2024 வரை 6 ஆயிரத்து 701 பயனாளிகளுக்கு ரூ.32 கோடியே 74 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய் நலத்திட்ட உதவித் தொகையாக வழங்கப் பட்டுள்ளது. இதுதவிர, இறுதி அடக்கச் செலவுகளுக்கு 5 ஆயிரம் ரூபாய் கூடுதலாக வழங்கப்படுகிறது.

இவை தவிர, உயர்த்தப்பட்ட திருமண உதவித் தொகை, உயர்த்தப்பட்ட ஓய்வூதியம், மூக்குக் கண்ணாடி உதவித் தொகை, கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு உயர்த்தப்பட்ட விடுதிக் கட்டணங்கள் எனப் பல நலத்திட்ட உதவிகளும் காலத்திற்கேற்ப உயர்த்தப்பட்டு, கட்டுமானத் தொழிலாளர்களின் வாழ்க்கையில் மாற்றங்களைக் கொண்டு வருகிறது நம் மகத்தான அரசு.

**...சாதனை தொடரும்**

### எரிபவர்களுக்கு எரியட்டும்!



‘சிந்துவெளி நாகரிகம்’ என்பது ஆரியர்களுக்கு முற்பட்ட ‘திராவிட நாகரிகம்’ என நிறுவியவர், பிரிட்டிஷ் இந்தியாவின் தொல்லியல் துறை பொறுப்பு வகித்த, சர் ஜான் மார்ஷல். அவரது ஆய்வு, ‘இல்லஸ்ட்ரேட்டட் லண்டன் நியூஸ்’ (illustrated London News) இதழில், 1924-ஆம் ஆண்டு செப்டம்பர் 20-ஆம் தேதி வெளியிட்டார்.

சிந்துவெளி ஆய்வு நிறுவப்பட்ட நூற்றாண்டினைச் சிறப்பிக்கும் வகையில், அவருக்கு உருவச்சிலை அமைக்கப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் அறிவித்துள்ளார். அதற்கு தமிழ் அறிவுச் சமூகத்தினர் மத்தியில் வரவேற்பு கிடைத்துள்ள நிலையில், ஆரிய அடிவருடிகளுக்கு அரசின் அறிவிப்பு எரியத்தான் செய்யும் எனப் பதிலடி அளித்துள்ளார், பத்திரிகையாளர் கோவி.லெனின்.

ஃபேஸ்புக் சமூக வலைதளத்தில் அவர் எழுதியுள்ள பதிவில், ஆரியத்துக்கும், அதன் நேரடி - மறைமுகக் கூட்டாளிகளுக்கும் திராவிடம் என்றால், எரியத்தான் செய்யும். தமிழ் மொழி, பண்பாடு ஆகியவற்றின் பெருமைகளைப் பாதுகாப்பதும், தமிழர்களின் வளர்ச்சிக்கானத் திட்டங்களைச் செயல்படுத்துவதும் திராவிடம்தான் என்பதால், எரிபவர்களுக்கு எரியட்டும் என பதில் அளித்துள்ளார்.

காலம், இந்திய வரலாறு தெற்கிலிருந்து எழுதப்பட வேண்டியதன் தேவையை உணர்த்துகிறது. அதற்கான செயல்பாடுகள் தொடரட்டும் என்கிற அவரது பதிவும் ஆரிய அடிவருடிகளுக்கு எரியவே செய்யும்.

### ஃப்ளாஷ்பேக்



மு.பாண்டியராஜன்



**கணையாழி அணிவித்து வாழ்த்து!**

1986-ஆம் ஆண்டு நடைபெற்ற சட்ட எரிப்புப் போராட்டம் உள்ளிட்ட பல்வேறு போராட்டங்களில் பங்கெடுத்து சிறை சென்றுள்ளேன். 06/09/1995 அன்று நீலகிரி மாவட்டம், கூடலூர் ஒன்றியச் செயலாளராக இருந்த போது தேர்தல் நிதி அளிப்புப் பொதுக்கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தேன். அக்கூட்டம் சிறப்பாக நடைபெற்றதையொட்டி, என்னைப் பாராட்டி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், கணையாழி அணிவித்து வாழ்த்தினார். அந்தக் கணையாழியைப் பார்க்கும்போதெல்லாம் பழைய நினைவுகள் வந்து செல்லும்.

**- மு.பாண்டியராஜன்,**
**முன்னாள் ஒன்றியச் செயலாளர்,**
**கூடலூர் ஒன்றியம், நீலகிரி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

### கருவூலம்


**அமைப்புக் குழு!**

1982-ஆம் ஆண்டு, ஜூலை 31-ஆம் தேதி மற்றும் ஆகஸ்ட் 1-ஆம் தேதிகளில், இளைஞர் அணி தொடங்கப்பட்ட இரண்டாம் ஆண்டு விழா திருச்சியில், பெரிய மாநாடு போல நடத்தப்பட்டது. முதல்நாள் மாணவர்கள், இளைஞர்கள் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் வகையிலும், இரண்டாவது நாள் இளைஞர் அணி பேரணியும் நடைபெற்றன. அந்தக் கூட்டத்தில்தான், முறையாக இளைஞர் அணிக்காக ஒரு அமைப்புக் குழு அறிவிக்கப்பட்டது.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

609

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131